# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 132 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 09.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# "சவால்களுக்கு தீர்வு காண துணியுங்கள்" இளைஞர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை



புதுடெல்லி: புதிய சவால்களுக்குப் புதிய தீர்வுகளைக் காணும் துணிச்சலைக் கொண்டிருப்பவரே வெற்றி பெறுவார்கள், எனத் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, இளைஞர்கள் அத்தகைய துணிச்சலைக் கொண்டிருக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

டெல்லி ஐஐடி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "இன்று உலகம் மிக வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. மாறி வரும் இந்த உலகமும் தொழில்நுட்பமும் புதிய வாய்ப்புகளைக் கொண்டு வரும். யார் தொடர்ந்து கற்றுக்கொள்கிறார்களோ அவர்களே வெற்றி பெறுவார்கள்.

புதிய சூழல்களையும் சவால்களையும் ஏற்றுக்கொள்பவர்கள் அந்த சவால்களை வாய்ப்புகளாக மாற்றுவார்கள். டெல்லி ஐஐடியில் நீங்கள் இதைத்தான் கற்றுக்கொண்டீர்கள்.

இன்று உலகின் மிக முக்கிய சன்பாடுகள் மிக வேகமாக மாறுகின்றன. உலகளாவிய அதிகாரச் சமநிலையும் ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டிருக்கிறது. இதன் பின்னணியில் உள்ள மிகப் பெரிய சக்தி தொழில்நுட்பத்தின் வேகம்தான்.

அடுத்த 20-30 ஆண்டுகளில் உலகம் எப்படி இருக்கும் என்று இன்று யாராலும் உறுதியாகச் சொல்ல முடியாது. மாற்றம் நிகழும்போ தெல்லாம் சவால்களும் எழுகின்றன. அதே நேரத்தில், புதிய வாய்ப்புகளும் உருவாகின்றன.

உலகம் மாறும், தொழில்நுட்பம் மாறும், தொழில் துறைகள் மாறும், தொழில் முறைகளும் மாறும். ஆனால், இவை அனைத்துக்கும் மத்தியில் கற்றுக்கொள்பவரே வெற்றி பெறுவார். புதிய சவால்களுக்குப் புதிய தீர்வுகளைக் காணும் துணிச்சல் கொண்டவரே வெற்றி பெறுவார். அவருக்கு சவால்கள் வாய்ப்புகளாக மாறும்.

வாழ்க்கையில் ஆர்வத்தை தக்கவைத்துக்கொள்ளுங்கள். கற்றுக்கொள்ளும் உந்துதலை உயிர்ப்புடன் வைத்திருங்கள்.

இந்தியா பொருளாதார தன்னிறைவு, தொழில்நுட்ப தன்னிறைவு, தொழில்சார் தன்னிறைவு என ஒவ்வொரு துறையிலும் தன்னிறைவு பெற்ற நாடாக மாற செயல்பட்டு வருகிறது. இதுவே வளர்ந்த இந்தியாவின் அடித்தளமாகும். இளைஞர்கள் எவ்வளவு வலிமையானவர்களோ அந்த அளவுக்கு நாடும் வலிமையானதாக இருக்கும். முன்பு அனுமதி மறுக்கப்பட்ட பல துறைகளை நாங்கள் திறந்துவிட்டுள்ளோம். ஆட்சி நிர்வாகத்தில் முற்போக்கான சிந்தனையுடன் இளைஞர்களுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. செமிகண்டக்டர் துறை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்தியாவின் ஸ்டார்ட்-அப் புரட்சியானது, உங்களைப் போன்ற இந்த தலைமுறை இளைஞர்களால் வடிவமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது. தீர்வு காண்பதற்கான துணிச்சலைக் கொண்டிருங்கள். டெல்லி ஐஐடியில் இருந்து எண்ணற்ற ஸ்டார்ட்-அப் நிறுவனர்கள் உருவாகி உள்ளனர். ஒரு கல்வி நிறுவனமே இவ்வளவு சாதனைகளைச் செய்ய முடியுமென்றால், நாடு முழுவதும் உருவாக்கப்பட்டு வரும் அந்த மாபெரும் சக்தியை ஒருமுறை கற்பனை செய்து பாருங்கள்" என தெரிவித்தார்.

# தொகுதி மறுவரையறை எம்.பி.க்களுடன் முதலமைச்சர் விஜய் ஆலோசனை

## தி.மு.க., அ.தி.மு.க. புறக்கணிப்பு



சென்னை: தொகுதி மறுவரையறை மசோதா குறித்து விவாதிப்பதற்காக, தவெக அரசு ஏற்பாடு செய்துள்ள தமிழக எம்.பி.க்கள் ஆலோசனைக் கூட்டத்தை திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகள் புறக்கணித்துள்ளன.

நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடர் கடந்த ஜூலை 20-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் திருத்தப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதாவை மீண்டும் கொண்டுவர மத்திய அரசு முயற்சிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், தொகுதி மறுவரையறை பணிகள் குறித்து விவாதிப்பதற்காக தமிழக எம்.பி.க்கள் ஆலோசனைக் கூட்டத்துக்கு முதல்வர் விஜய் அழைப்பு விடுத்திருந்தார்.

முதல்வர் விஜய் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தை புறக்கணிப்பதாக திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகள் அறிவித்துள்ளன.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள திமுக நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி, "யாரும் கேட்காமலேயே அவசர அவசரமாகத் தொகுதி மறுவரையறைக்கான கலந்தாய்வுக் கூட்டத்தை தவெக அரசு தற்போது கூட்டியிருப்பது, காவிரி பிரச்சினையில் இருந்து மக்களை திசைதிருப்பும் அரசியல் நாடகமேயன்றி வேறில்லை. இதில் திமுக பங்கேற்காது" என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல, அதிமுகவும் இந்தக் கூட்டத்தை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது. "தொகுதி மறுவரையறை குறித்த புதிய மசோதா எதுவும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படாத, அதற்கான எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் இல்லாத நிலையில், எதற்காக தமிழக முதல்வர் அவசர அவசரமாக எம்.பி.க்கள் கூட்டம் என்ற பெயரில் ஒரு நாடகத்தை அரங்கேற்றுகிறது?

கண்முன்னே நடக்கும் காவிரி - மேகேதாட்டு பிரச்சினைக்கு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் கோரியுள்ள நிலையில், அவற்றை எல்லாம் உதாசினப்படுத்திவிட்டு இந்த அரசின் முதல்வர், எதற்காக தாக்கல் செய்யப்படாத மசோதாவுக்கு கூட்டத்தை நடத்துகிறார்?

இன்று வரை மேட்டூர் அணை திறக்கப்படவில்லை. டெல்டா மாவட்டங்களில் தண்ணீர் இல்லை. விவசாயிகள் கண்ணீருக்கு பதில் சொல்லாமல் இந்த அரசு நடத்தும் மடைமாற்று அரசியல் அரங்கேற்றத்துக்கு அதிமுக ஒருபோதும் துணை போகாது" என்று அதிமுக தெரிவித்துள்ளது.

மேலும், திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள தேமுதிக மற்றும் மக்கள் நீதி மய்யம் கட்சிகளும் இந்தக் கூட்டத்தை புறக்கணித்துள்ளன. பாமகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள போவதில்லை எனத் தெரிவித்துள்ளது.

காவிரி மற்றும் மேகேதாட்டு விவகாரத்தில் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுமாறு தமிழக அரசை இந்தக் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. எனவே, இப்போது தொகுதி மறுவரையறை பிரச்சினைக்காக கூட்டப்படும் அனைத்துக் கட்சி எம்.பிக்கள் கூட்டத்தை இக்கட்சிகள் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன.

தமிழகத்தில் தற்போதைய சுழலில் மக்களவை, மாநிலங்களவையில் மொத்தம் 57 எம்.பிக்கள் உள்ளனர். இதில் திமுகவின் 30 எம்.பிக்கள், அதிமுகவின் 4, பாமக, தேமுதிக, மநீமவின் தலா ஒரு எம்.பி என மொத்தம் 37 பேர் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தை புறக்கணித்து ள்ளனர். காங்கிரஸ் எம்பிக்கள் மாணிக்கம் தாகூர், விஷ்ணு பிரசாத், ஜோதிமணி, விஜய் வசந்த், பிரவீன் சக்கரவர்த்தி, ப.சிதம்பரம் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். விசிக தலைவரும் எம்பியுமான திருமாவளவன் மற்றும் அக்கட்சி எம்பி ரவிக்குமார், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி எம்பி நவாஸ் கனி, கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலா இரண்டு எம்பிக்கள், மதிமுக எம்பி துரை வைகோ ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். தமிழகத்தில் மக்களவை மற்றும் மாநிலங்களவை எம்.பிக்கள் மொத்தம் 57 பேர் உள்ள நிலையில், 19 எம்.பிக்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று உள்ளனர். 37 எம்.பிக்கள் கூட்டத்தை புறக்கணித்து உள்ளனர். காங்கிரஸ் எம்பி சுதா இன்றைய கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் ஆகஸ்ட் 14 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் (ஆக.9) முதல் ஆக.14-ம் தேதி வரை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வட கடலோர தமிழக பகுதிகளின் மேல் சுமார் 5.8 கிமீ முதல் 7.6 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஆக.9) மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று வீசக்கூடும். 10 முதல் 14-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வரும் 10 முதல் 12-ம் தேதி வரை வடதமிழகத்தின் உள் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாகவும், இதர தமிழகத்தில் வழக்கமான அளவை ஒட்டியும் இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் பவானியில் 8 செமீ, விண்ட் வொர்த் எஸ்டேட், அவலாஞ்சி, கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் தலா 4 செமீ, நீலகிரி மாவட்டம் கூடலூர் சந்தை, மேல் கூடலூரில் தலா 3 செமீ, தேவாலா, நடுவட்டம், கோவை மாவட்டம் சின்கோனா, வால்பாறை, சோலையார், பெரம்பலூர் ஆகிய இடங்களில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## உளுந்தூர்பேட்டையில் காவல்துறை சார்பாக மது மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை நடத்தினர்

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் காவல்துறை சார்பாக மது மற்றும் போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது இந்த பேரணியை கள்ளக்குறிச்சி மாவட்ட துணை கண்காணிப்பாளர் அசோகன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது இந்த பேரணியை துவக்கி வைப்பதற்காக கள்ளக்குறிச்சி மாவட்ட ஏடிஎஸ்பி திருமால் அவர்கள் கலந்து கொண்டு கொடியசைத்து துவக்கி வைத்தார் இந்த பேரணி உளுந்தூர்பேட்டை அடுத்த மூலசமுத்திரம் பைபாஸ் சந்திப்பில் துவங்கி உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முடிவடைந்தது சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம்வரைஇந்தபோதை விழிப்புணர் பேரணி நடைபெற்றது இந்த பேரணியில் சுமார் 500க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் இளைஞர்கள் என பலர் கலந்து கலந்து கொண்டு பேரனின் போது மாணவர்கள் போதைப் பொருளால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அதனை



இளைஞர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் கோஷமிட்டு பதாகை மது நாட்டுக்கு வீட்டுக்கு உயிருக்கும் கேடு என்று கூறிபேரணியாகசென்று உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் முடிவடைந்தது பின்னர் கலந்து கொண்டமாணவமாணவிகளுக்கு இளைஞர்களுக்கு தண்ணீர் பிஸ்கட் மற்றும்தேனீரகொடுத்து பேரணி முடித்து வைத்தனர்.

## கோவை கிரடாய் கண்காட்சியில் தடம் பதித்த தியா நிறுவனம்




கோவையில் ஆகஸ்ட் 9 வரை மூன்று நாட்கள் நடைபெறும் CREDAI "ஃபேர்ப்ரோ 2026" (Fairpro 2026) சொத்து மற்றும் வீட்டுமனை விற்பனைக் கண்காட்சியில், கட்டு மானத் துறையில் முன்னணியில் இருக்கும் தியா ஃபவுண்டேஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் பங்கேற்றுள்ளது. கோவை கிரடாய் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் புகழ்பெற்ற "ஃபேர்ப்ரோ 2026" வீட்டுமனை விற்பனைமற்றும்கண்காட்சி இன்று கோவையில் கோலாகலமாகத் தொடங்கியது. ஆகஸ்ட் 9 வரை மூன்று நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சியில், பல்வேறு முன்னணி கட்டுமான நிறுவனங்கள் தங்களது நவீன திட்டங்களை விசிட்டர்களின் பார்வைக்கு வைத்துள்ளன.

இதில், தமிழகத்தின் முன்னணி கட்டுமான நிறுவனங்களில் ஒன்றான தியா ஃபவுண்டேஷன் பிரைவேட் லிமிடெட், தனது அதிநவீன குடியிருப்புத் திட்டங்கள், சொகுசு வீடுகள் மற்றும் நியாயமான விலையிலான வீட்டுமனைகளுடன் பங்கேற்றுள்ளது.தியா ஃபவுண்டேஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத் தலைவர் ஸ்ரீராம் கூறுகையில் சொந்த வீடு மற்றும் மனை வாங்க விரு ம்புவோருக்கு ஒரே இடத்தில் அனைத்துத் தகவல்களும், பிரத்யேக சலுகைகளும், வங்கிக் கடன் வசதிகளும் கிடைக்கும் வகையில் தியா ஃபவுண்டேஷனின் அரங்கு அமைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கோவை பொதுமக்கள் தங்களின் கனவு இல்லத் தேர்வுகளை மேற்கொள்ளுமாறு கிரடாய் மற்றும் தியா பவுண்டேஷன் அமைப்பாளர்கள் அழைப்பு விடுத்து உள்ளனர்.



## கிரெடாய் கோவை அமைப்பு சார்பில் 'ஃபேர்ப்ரோ2026' மெகா வீட்டுமனை கண்காட்சி

'கிரெடாய் கோவை அமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மூன்று நாள்கள் நடைபெறும்'ஃபேர்ப்ரோ-2026' மெகா வீட்டுமனை கண்காட்சி,கொடிசியாவளாகத்தின் ஹால்-டி அரங்கில் இன்று கோலாகலமாக தொடங்கியுள்ளது. முன்னணி கட்டுமான நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் நவீன அரங்குகளை அமைத்து, தங்களது வீட்டுவசதி மற்றும் நிலத் திட்டங்களை காட்சிப்படுத்தியுள்ளன. அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டுமனை கள், வாஸ்து அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள்,தனி வீடுகள், பிரீமியம்குடியிருப்புகள், பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய குடியிருப்பு வளாகங்கள், முதியோருக்கான குடியிருப்புகள் உள்ளிட்டவை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. கண்காட்சி நடைபெறும் நாள்களில் வீடு வாங்குவோருக்கு சிறப்பு சலுகைகளும் வழங்கப்படுகின்றன. மேலும், திட்டங்களை நேரில் பார்வையிட விரும்புவோருக்காக கண்காட்சி அரங்கிலிருந்து திட்டப் பகுதிகளுக்கு களப்பயண வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியின் தொடக்க விழாவில் கிரெடாய்கோவைதலைவர் எஸ்.ஆர். அரவிந்த் குமார் பேசியதாவது.. கோவையில் வீடு வாங்குவோர் ஆண்டுதோறும் ஆவலுடன் எதிர்பார்க்கும் நிகழ்வாக ஃபேர்ப்ரோ வளர்ச்சி பெற்றுள்ளது. கிரெடாய் உறுப்பினர்கள் கட்டடங்களை மட்டும் நிர்மாணிப்பதில்லை; நகரின் வளர்ச்சிக்கும், அதன் வானளாவிய தோற்றத்தை உருவாக்குவதற்கும் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். கோவை மண்டலத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குப் பின்னணியில் கிரெடாய் முக்கியப் பங்காற்றி வருகிறது என்றார். இந்த நிகழ்ச்சியில் கிரெடாய் தமிழ்நாடு தலைவர்-தேர்வு குகன் இளங்கோ, மற்றும் பாரத ஸ்டேட் வங்கியின் நெட்வொர்க்-3 பொது மேலாளர் ஹரிதா பூர்ணிமா கண்காட்சியைத் தொடங்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் ஃபேர்ப்ரோ-2026 தலைவர் பி. கார்த்திக் குமார், கிரெடாய் துணைத் தலைவர் ராஜீவ் ராமசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## பத்து ரூபாய் இயக்கம் ராத்திரி ரவுண்ட்ஸ் 17ஆவது ஆண்டு விழா ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்பு

ராணிப்பேட்டை மாவட்டம் பத்துரூபாய் இயக்கம் மற்றும் ராத்திரி ரவுண்ட்ஸ் பத்திரிக்கையின் 17வது ஆண்டு விழா ஆற்காடு அடுத்த ரத்தினகிரி கன்னிகாபுரம் கிராமத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் சிறப்புர நடைபெற்றது இவ்விழாவிற்கு பத்து ரூபாய் இயக்கத்தின் மாநிலத் துணைப்பொதுச் செயலாளரும், ராத்திரி ரவுண்ட்ஸ் பத்திரிகையின் ஆசிரியருமான தர்மேந்திரன் தலைமை தாங்கினார், மாநில செயலாளர் சதீஷ்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார்

வழக்கறிஞர் பாஸ்கர், திருமலை, வாசுதேவன், சுதாகர், ராணிப்பேட்டை மாவட்ட துணை செயலாளர் சுதாகர், பழனியப்பன், டேவிட்குமார், சீனிவாசன் கோவிந்தசாமி, மூர்த்தி, ராஜா உள்ளிட்ட பத்து ரூபாய் இயக்கத்தின் முன்னணி பொறுப்பாளர்கள் முன்னிலைவகித்தனர் இந்நிகழ்வில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சுகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் அதனைத் தொடர்ந்து இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட 10ரூபாய் இயக்கத்தின் பொதுச் செயலாளர் நல்வினை விஸ்வராஜு கருத்துரை வழங்கினார்

தொடர் நிகழ்வாக சிறந்த சமூக ஆர்வலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது மக்கள் பணியில் சிறப்பாக செயலாற்றிய நபர்களுக்கு தகவல் போராளி விருதும் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் தமிழக முழுவதிலும் உள்ள பத்து ரூபாய் இயக்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இதில் ராணிப்பேட்டை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வாசுதேவன் நன்றி கூறினார்.



கேரளாவிற்கு கனிம வளம் கொண்டு செல்லப்படுவதற்கு மூன்று மாதம் தமிழக அரசு தடை விதித்துள்ளது இந்த தடையானது நிரந்தரமாக விதிக்க வேண்டும் என வலியுறுத்தி டாக்டர்அய்யாதுரைப்பாண்டியன்தலைமையில்புளியரையில்மாபெரும்உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது போராட்டத்தில் ஊத்துமலை இளைய ஜமீன்தார் குமரேசராஜா, பேச்சிமுத்து பழனிச்சாமி அன்வர் பாலசிங்கம் செல்லதுரை விவசாயிகள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்பு.

## எஸ்ஆர்எம் பல்கலைக்கழக வேந்தர் பாரிவேந்தர் பிறந்தநாள் விழா

### போதை இல்லா தமிழகம் விழிப்புணர்வு மாரத்தான்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள பாபுராயன் பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் எஸ் ஆர் எம் வேளாண் அறிவியல் கல்லூரியில் எஸ் ஆர் எம் பல்கலைக்கழக வேந்தர் பாரிவேந்தர் பிறந்தநாளைமுன்னிட்டு போதை இல்லா தமிழகம்விழிப்புணர்வுபசுமை மாரத்தான் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சுற்றுவட்டார பகுதியில் இருந்து அரசு மற்றும் தனியார் பள்ளி கல்லூரி மாணவர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் மூன்று வயது முதல் 10 வயது வரை 6 கிலோமீட்டர் தூரம் 11 வயது மேற்பட்டோருக்கான தூரம் மாரத்தான் போட்டி நடைபெற்றது இந்த நிகழ்ச்சியை ஒன்றிய குழு உறுப்பினர் பொன்மலர் சிவக்குமார் கொடி அசைத்து துவக்கி வைத்தார் இதில் முதல் 10 இடம் பிடித்த மாணவர்களுக்கு கோல்ட் மெடல் மற்றும் தல பத்தாயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது இதில் கல்லூரி டீன் பேராசிரியர்கள் ஊழியர்கள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர் மாரத்தான் போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பதக்கம் மற்றும் சான்று வழங்கப்பட்டது

## ஆடி வெள்ளியை முன்னிட்டு 100 வாகனங்களை ஒரே நாளில் டெலிவரி வழங்கிய ராயல் என்பீல்டு நிறுவனம்

### சாய்பாபா காலனி கிளையில், மகிழ்ச்சியுடன் வாகனங்களை ஓட்டி சென்ற வாடிக்கையாளர்கள்



. ஆடி வெள்ளி நாளில் நாம் எந்த செயலை செய்தாலும் அது இரட்டிப்பாக அமையும் எனும் நம்பிக்கை உள்ளதால் இந்த ஆடி மாதத்தில் புதிய வாகனங்கள் வாங்குவது, தங்க நகைகள் வாங்குவது என அனைத்து செயல்பாடுகளையும் இன்றைய நாளில் பொதுமக்கள் செய்வது வழக்கம், இதன் வரு பகுதியாகஇன்று,கோவைசாய்பாபாகாலனிபகுதியில் உள்ள ராயல் என்ஃபீல்டு ஷோரூமில், 100 வாடிக்கையாளர்கள்தங்களதுவாகனங்களைஇன்று எடுத்து கொண்டனர். வாகனத்தை வாங்க இந்த சுபநாளில் வாகனமுன்பதிவு செய்வதற்கும் வாடிக்கையாளர்கள் ஆர்வம் காட்டினர் இது குறித்து கோவை சாய்பாபா காலனி ராயல் என்ஃபீல்டு விற்பனை மையத்தின் உரிமையாளரும், ராயல் என்பீல்டு ரைடர்ஸ் ஐ கான் அமைப்பின் உரிமையாளருமான கார்த்திகேயன், செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.. ஒரே நாளில் நூறு வாகனங்களை வாடிக்கை யாளர்கள் குடும்பத்துடன் வந்துஆடி18ம்நாளில்,குடும்பத்துடன்வந்துடெலிவரி எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றனர். இங்கு வாகனங்கள் வாங்கும் வாடிக்கையாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களுடன் ஒரு லாங் ட்ரைவ் செல்லும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாதம் ஒரு முறை செய்து வருகின்றோம். இந்த விழிப்புணர்வுநிகழ்ச்சியில்வாடிக்கையாளர்களுக்கு, சாலை பாதுகாப்பு, சிக்னல்கள் பற்றிய விழிப்புணர்வு, தலைக்கவசம் அணிவது, சாலை விபத்துக்களை தடுப்பது, அதிவேக பயணங்களால் ஏற்படும் இன்னல்கள் குறித்து தெளிவாக பயிற்சிகள் அளிக்க படும். இந்த விழிப்புணர்வு பேரணியில் எங்களது ஷோரும் மெக்கானிக்குகள், டெக்னீஷியன்கள் என அனைவரும் கலந்து கொள்வதால் வாகனங்களில் உள்ள குறைகளையும் கண்டு பிடித்து அவை பழுது நீக்க ஏதுவாக செய்து தரப்படும், இந்த விழிப்புணர்வு பேரணிக்கு காவல்துறையினர் எங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றதாக தெரிவித்தார். இது வாகனங்களை வாங்கி செல்லும் வாடிக்கையாளர்களுக்கும் எங்களுக்கும் உள்ள இடைவெளியை குறைத்து, ஷோரும் உடன் ஒரு நீடித்த உழைப்பை தெரிவித்தார்.

## தேவகோட்டை பள்ளியில் புதிய கற்றல் முறை: ஆடியோ, செயற்கை நுண்ணறிவு துணையுடன் என்.எம்.எம்.எஸ். பயிற்சி



மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தையும், மனப்பாடத்துக்கு பதிலாகப் புரிந்து கற்கும் திறனையும் வளர்க்கும் வகையில், தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம்நடுநிலைப்பள்ளியில்திறந்தபுத்தகப் பயிற்சி (Open Book System Practice) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சியை பள்ளித் தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம் அறிமுகப்படுத்தினார். மாணவர்கள் பாடப்புத்தகத்தைப் படித்து, அதிலிருந்தே வினாக்களுக்கான விடைகளைத் தேடி எழுதும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்மூலம் தேர்வு பயம், மன அழுத்தம் குறைந்து, தன்னம்பிக்கையுடன்புரிந்துகற்கும்பழக்கம்உருவாகும் என விளக்கப்பட்டது. தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவித்தொகைத் தேர்வான என்.எம்.எம்.எஸ்.தேர்வுக்குத்தயாராகும்மாணவர்களுக்கு7மற்றும் 8-ம் வகுப்பு வரலாறு உள்ளிட்ட பாடங்களை அடிப்படையாகக் கொண்டு பாடப்புத்தகத்தில் இருந்து விடைகளைத் தேடிக் கண்டறியும் பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சிக்குப் பிறகு மாணவர்களின் மதிப்பெண்கள் தெரிவிக்கப்பட்டு, பெற்றோரிடம் காண்பிக்கவும் ஊக்குவிக்கப்படுகிறது. ஆசிரியை சிவரஞ்சனி மாணவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறார். மேலும், மாணவர்களுக்காக தனி என்.எம்.எம்.எஸ். குழு உருவாக்கப்பட்டு, படிப்பு வழிகாட்டிகள், தேர்வு அட்டவணைகள், பயிற்சி வினாத்தாள்கள் மற்றும் கற்றல் இணைப்புகள் தொடர்ந்து பகிரப்பட்டு வருகின்றன. கணிதம், அறிவியல், சமூக அறிவியல், உள்ளிட்ட பாடங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு பயிற்சிஅளிக்கப்படுகிறது.ஒரேநாளில்பலதேர்வுகளை நடத்துவதற்குப் பதிலாக, பாடவாரியாகத் தேர்வுகள் நடத்தப்படுவதால் மாணவர்கள் எளிதாகத் தயாராக முடிவதாகத் தெரிவித்தனர். மாணவர்களின் மதிப்பெண்கள்பள்ளிவாட்ஸ்அப்குழுவில்பகிரப்பட்டு, பள்ளிக் கூட்டங்களில் பாராட்டப்பட்டு வருகின்றன. "புத்தகத்தைப் படிப்போம்... விடைகளைத் தேடிப் பிடிப்போம்... புரிந்து கற்போம்... வெற்றி பெறுவோம்" என்ற முழக்கத்துடன் செயல்படுத்தப்படும் இந்தப் பயிற்சியை அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



தென்காசி மாவட்டத்தில் உள்ள ஏழைகளின் ஸ்பா என அழைக்கப்படும் சுற்றுலாத்தலமான குற்றாலம் சீசன் துவங்கிய நிலையில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் குற்றாலத்தில் இருந்து ஐந்தறிவு செல்லும் சாலையில் அமைந்துள்ள வெள்ளமடை குளத்தில்தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் குற்றாலம்படகும்அமைக்கப்பட்டுபராமரித்துவருகின்றனர்தற்பொழுதுபடகுகுளத்தினை சுற்றுலா பயனாளிகளின் பயன்பாட்டிற்காக மாவட்ட வருவாய் அலுவலர் வீராசாமி திறந்து வைத்தார்.

# சோளிங்கர் கோவில் சொத்துக்களை மீட்கக்கோரி கவன ஈர்ப்பு உண்ணாவிரதம்

## இந்து மக்கள் கட்சி கூட்டத்தில் தீர்மானம்




ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில், இந்து மக்கள் கட்சி வேலூர் கோட்டத் தலைவர் எஸ்.கே.மோகன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. சோளிங்கர் தக்காண்குளம் அருகே உள்ள பத்மாபுரம் கிராமத்தில், சோளிங்கர் லட்சுமி நரசிம்ம சுவாமி கோவில் கோவிலுக்குச் சொந்தமான கிராமக் கணக்கு எண் 34, சர்வே எண் 24/1-ல் அமைந்துள்ள சுமார் 1,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த பெருமாள் உற்சவர் கோவிலை புதுப்பித்து கும்பாபிஷே கம் நடத்த வேண்டும். கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்கள் அனைத்தையும் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து மீண்டும் விளக்கேற்றி வழிபாடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதுதொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர், மாவட்ட ஆட்சியர், வருவாய்த்துறை மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளிடமும் மனுக்கள் அளித்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, முதல் கட்டமாக வரும் 22.08.2026 அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை சோளிங்கர் பேருந்து நிலையம் அருகில் ஒரு நாள் கவன ஈர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது என ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்த போராட்டத்தில் இந்து மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் தமிழ் திரு. அர்ஜுன் சம்பத் கலந்து கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் ஆன்மீகப் பிரிவு மாவட்டத் தலைவர் ஆஞ்சநேயர், மாவட்டச் செயலாளர் பார்த்திபன், வாலாஜா ஒன்றிய பொதுச் செயலாளர் குமார், வாலாஜா ஒன்றியச் செயலாளர் மணிவண்ணன், வாலாஜா கிழக்கு ஒன்றியத் தலைவர் அன்பழகன் மற்றும் பத்மாபுரம் கிளை நிர்வாகிகள் பாஸ்கர், நரசிம்மன், சின்னப்பா, அன்பு, சதீஷ், பிரவீன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

# அதிக அளவில் சீனி சேர்ப்பு: உடன்குடி கருப்பட்டி வியாபாரிகள் 5 பேருக்கு ரூ.38 கோடி அபராதம்!



"கற்பகத்தரு" என்று அழைக்கப்படும் பனையில் இருந்து கிடைக்கப்பெறும் பதநீரை காய்ச்சி கருப்பட்டி தயாரிக்கின்றனர். பனை மரங்கள் நிறைந்த தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி பகுதியில் தயாரிக்கப்படும் கருப்பட்டிக்கு புவிசார் குறியீடு கிடைக்கப் பெற்றுள்ளது. இதனால் உடன்குடி பகுதியில் பலரும் பனைத்தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டு கருப்பட்டி தயாரித்து விற்கின்றனர். பனை தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், பதநீரில் இருந்து தயாரிக்கப்படும் கருப்பட்டி, கற்கண்டுக்கு மத்திய அரசு ஜி.எஸ்.டி. விலக்கு அளித்துள்ளது. எனினும் அவற்றை கடைகள், சூப்பர் மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யும்போது 5 சதவீத ஜி.எஸ்.டி. விதிக்கப்படுகிறது.

ஆனால் பதநீரில் 75 சதவீதத்துக்கும் அதிகமாக சீனி கலந்து கருப்பட்டி, கற்கண்டு போன்றவை தயாரித்தால், அவற்றுக்கு 18 சதவீத வரி விதிக்கப்படுகிறது. பனை பொருட்களை சில்லறையில் விற்பனை செய்தால் வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இந்த நிலையில் தமிழகத்திலேயே உடன்குடி பகுதியில்தான் சீனி மூட்டைகளை வியாபாரிகள் அதிகளவில் கொள்முதல் செய்ததாக நெல்லை ஜி.எஸ்.டி. அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதுதொடர்பாக ஜி.எஸ்.டி. அதிகாரிகள் உடன்குடி பகுதியில் ஆய்வு செய்தனர். இவ்வாறு கடந்த 6 ஆண்டுகளில் கருப்பட்டி வியாபாரிகள் சிலர் பல்வேறு முறைகேடுகள் செய்தது கண்டறியப்பட்டன. இதுதொடர்பாக உடன்குடி பகுதியைச் சேர்ந்த 5 கருப்பட்டி வியாபாரிகளுக்கு மொத்தம் ரூ.38 கோடி அபராதம் விதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளியில்

# 120 ஆண்டுகளாக மாணவர்கள் தரையில் அமர்ந்து படித்த பள்ளி வகுப்பறைகளுக்கு பெஞ்சுகள்



செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாட்டில் கிராமப்புற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 'கற்றல்வசதியுடன்கல்வி' (Educate@Comforts) என்னும் திட்டத்தை சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசா அறக்கட்டளை அறிமுகப்படுத்தி கிராமங்களில் செயல்படும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் வகுப்பறையில் உட்காருவதற்கு பெஞ்சுகளையும் எழுதுவதற்கு மேசைகளையும் தொடர்ந்து வழங்கிவருகிறது.

பெரும்பாலான கிராம அரசுப் பள்ளிகளில், போதுமான இருக்கைகள் / மேசைகள் இல்லாததால், மாணவர்கள் வகுப்பறைகளில் தரையில் அமர்ந்து படிக்க வேண்டிய அவல நிலை உள்ளது. நீண்ட நேரம் தரையில் அமரும் மாணவர்களின் முதுகெலும்பு வட்டுகளில் அழுத்தம் ஏற்படு கிறது. இது காலப்போக்கில், முதுகுவலி மற்றும் முதுகெலும்பு குறைபாடுகள் போன்ற கடுமையான நிலைகளுக்கு வழிவகுக்கும். இவ்வாறு குறுகி அமர்ந்து செயல்படுவது நுரையீரல் கொள்ளளவைக் குறைக்கவும் செய்கிறது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றல் வசதியை மேம்படுத்த மிகச்சரியான இருக்கை வசதிகளை (Ergonomic seating) வழங்குவதன் மூலம் மாணவர்களின் உடல்நலனுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் கற்கும் திறனை மேம்படுத்தவும் இயலும் என்பதனால் 'கற்றல்வசதியுடன்கல்வி' (Educate@Comforts) திட்டத்தை இதன் நிறுவுனர் - தலைவர் கவிஞர் விஜயகிருஷ்ணன் தொடங்கி தொடர்ந்து பல பள்ளிகளில் செயல்படுத்தி வருகிறார்.

இந்த திட்டத் செயலாக்கம் அரசின் நிதி உதவியின்றி மேற்கொள்ளப்படுகிறது. அனைத்து தளபாடங்களும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு முழுமையாக ஏற்றதுஎன்பதை உறுதி செய்ய, முழுமையான கட்டமைப்பு மற்றும் பாதுகாப்புத் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றன. 'கற்றல்வசதியுடன்கல்வி' திட்டத்தின் தொடக்க இலக்கென்பது அமரும் இருக்கைகள் மற்றும் எழுது மேசைகள் தேவைப்படும் செங்கல்பட்டு மாவட்டத்தில் இயங்கும் அரசு தொடக்கப்பள்ளி மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கு இவற்றை வழங்குவதேயாகும்.

பின்னர் இத்திட்டம் தமிழ்நாட்டின்அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மேலும் அரசு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களைத் தொடர்புக்கொண்டு வகுப்பறைகளுக்குத் தேவையான இருக்கை மற்றும் எழுது மேசைகளின் எண்ணிக்கையை அறிந்து 'கற்றல் வசதியுடன் கல்வி' திட்டதின்மூலம் வழங்கும் நடவடிக்கையில் இந்த அறக்கட்டளை தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

சென்னையில் உள்ள SBOA பள்ளி மற்றும் ஜூனியர் கல்லூரி மற்றும் சின்மயா வித்யாலயா பள்ளிகள் தாங்கள் பயன்படுத்தாத, பயன்படுத்தக்கூடிய இருக்கைகள் மற்றும் எழுது மேசைகளை 'கற்றல் வசதியுடன் கல்வி' திட்ட செயல்பா ட்டிற்காக வழங்கியுள்ளது.

இத்தகவல்களை கற்றல் வசதியுடன் கல்வி' (Educate@Comforts) திட்டத்தின் நிறுவுனர் - தலைவர் மற்றும் சிறுதாமூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசா அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநருமான கவிஞர் விஜயகிருஷ்ணன் தெரிவித்தார். மேலும் இவர் இந்த திட்டத்தின் பணிகளை மாநிலம்

முழுவதும் கொண்டு சேர்ப்பதற்கான தன்னார்வலர் குழுக்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இருக்கை மற்றும் எழுது மேசைகளை மதுராந்தகம் வட்டம் மொறப்பக்கம் பஞ்சாயத்து ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கு வழங்கும் விழா அப்பள்ளி வளாகத்தில் (07-08-2026) நடைபெற்றது.

நூற்று இருபது ஆண்டுகளாக மாணவர்கள் தரையில்அமர்ந்துபடித்த மொறப்பாக்கம் பள்ளி வகுப்பறைகளுக்கு பெஞ்சுகள் வழகப்பட்டன. செங்கற்பட்டு மாவட்டக் கல்வி அலுவலர் திரு. கமலக்கண்ணன், முதன்மை விருந்தினராக இவ்விழாவில் கலந்துகொண்டு மாணவர்களுக்கான இருக்கைகளை கவிஞர்விஜயகிருஷ்ணனிடமிருந்து பெற்று பள்ளிக்கு வழங்கினார். விழாவில் பேசிய அவர் 'கற்றல் வசதியுடன் கல்வி ' திட்டத்தின் பயன் செங்கற்பட்டு மாவட்டம் முழுமைக்கும் கிடைக்க இந்த அறக்கட்டளை ஆவன செய்யவேண்டும் என்றும் மாணவர்களின் கற்கும் ஆர்வம் இந்த வசதியால் அதிகரிக்கின்றது என்றும் கூறினார். கவிஞர் விஜயகிருஷ்ணன் பேசுகையில் 'கற்றல் வசதியுடன் கல்வி' மாநிலம் முழுவதும் கிராமப்புற அரசுப் பள்ளிகளுக்கு தமிழ்நாடு அரசின் அனுமதியுடன் விரிவுப்படுத்தப்படும் என்றார்.

வட்டாரக் கல்வி அலுவலர்கள் திரு. மணிவண்ணன்,, மொறப்பாக்கம் பள்ளித் தலைமை ஆசிரியர் திருமதி. கோமதி, சமூக ஆர்வலர் அமெரிக்கத் தமிழ்க் கவிஞர், பாடகர் திருமதி மேனகா நரேஷ், முனைவர் தாமரைச்செல்வி, சித்திரக்கூடம் அரசு நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு. ராஜேந்திரன், மொறப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி வசந்தி, திரு. யுவராஜ், சிறுதாமூர் திரு ரங்கப்பன் மற்றும் பெற்றோர்கள் இவவிழாவில் கலந்துகொண்டனர்.

முன்னதாக நேசம் அறக்கட்டளை திருமதி. பிரேமா அவர்கள் வழங்கிய எழுது பொருட்கள், உபகரணங்கள் சித்திரக்கூடம் மற்றும் மொறப்பாக்கம் அரசுப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.

# பழநி நில மோசடியில் கைதாகி மதுரை சிறையில் இருந்த வழக்கறிஞர் அன்வர்தீன் திடீர் உயிரிழப்பு





மதுரை: பழநி கோயில் நில மோசடி வழக்கில் கைதாகி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த முக்கிய நபரான வழக்கறிஞர் அன்வர்தீனின் திடீர் உயிரிழப்பால் சிபிசிஐடி போலீஸார் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், பழநி அடிவாரப் பகுதியில் உள்ள ரூ.100 கோடி மதிப்பிலான தண்டபாணி சுவாமிகள் மடத்துக்குச் சொந்தமான 1.40 ஏக்கர் நிலத்தை ரூ.2 கோடிக்கு மோசடியாக பதிவு செய்தது தொடர்பாக, சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், அறக்கட்டளை நிர்வாகி முருகதாஸ், இடத்தை வாங்கிய வெள்ளத்துரை, சேதுபதி, வழக்கறிஞர் அன்வர்தீன், இடைத்தரகராகச் செயல்பட்ட ஜெயப்பிரகாஷ் உள்ளிட்ட 11 பேர் மீது சிபிசிஐடி போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதில், இதுவரை ஜஸ்டின் மணிகண்டன் (தற்போது உடல் நலக்குறைவால் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் ), அறக்கட்டளை நிர்வாகி முருகதாஸ், நிலத்தை வாங்கிய வெள்ளத்துரை, சேதுபதி, பத்திரம் தயார் செய்து கொடுத்த வழக்கறிஞர் அன்வர்தீன் ஆகியோரை போலீஸார் கைது செய்தனர்.

இவ்வழக்கில் கூடுதல் தகவல்களை சேகரிக்கும் விதமாக கைது செய்யப்பட்ட வெள்ளத்துரை, சேதுபதி அன்வர்தீன் உள்ளிட்ட 4 பேரை சிபிசிஐடி போலீஸார், கடந்த 5-ம் தேதி முதல் மூன்று நாட்கள் போலீஸ் காவலில் எடுத்து விசாரணை செய்தனர். நேற்று மாலை போலீஸ் காவல் முடிந்த நிலையில், மதுரை மருத்துவமனையில் உடல்நலம் குறித்த பரிசோதனைக்கு பிறகே அன்வர்தீன் உள்பட 4 பேரும் மாலை 6 மணிக்கு மேல் மதுரை மத்திய சிறையில் மீண்டும் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இரவு 10:30 மணிக்கு மேல் அன்வர் தீனுக்கு திடீரென்று நெஞ்சு வலி ஏற்பட்ட நிலையில், சிறை அலுவலர்கள் உடனடியாக அவரை மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மருத்துவர்கள் பரிசோதனைக்கு பின்னர், அவர் வரும் வழியிலேயே உயிரிழந்ததாக தெரிவித்தனர். போலீஸ் காவலில் விசாரணையில் இருந்த போது தினமும் அவருக்கு மருத்துவ சிகிச்சை கொடுத்த நிலையில், அவர் மாரடைப்பால் உயிரிழந்து இருக்கலாம் என தெரிகிறது.

பழநி கோயில் நிலம் மோசடிக்கு தேவையான பல்வேறு ஆவணங்களை வழக்கறிஞர் அன்வர்தீன் தயார் செய்து கொடுத்ததாக கூறப்படுகிறது.

சுமார் 20 ஆண்டுக்கு மேலாக அந்த கோயில் இடம் குறித்த ஆவணங்களை கையாளுவதிலும், அந்த இடம்குறித்த வழக்கு தொடர்பான நடவடிக்கையிலும் அவர் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது.

ஏற்கனவே இவருக்கு கடந்த பத்தாண்டாக சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் இருந்தநிலையில், வாத (ஸ்ட்ரோக்) நோயாலும் அவதிப்பட்டு வந்துள்ளார். இதற்கிடையில்தான் பழநி கோயில் இடம் மோசடி வழக்கில் சிபிசிஐடி போலீஸாரால் அன்வர்தீன் கைது செய்யப்பட்டார்.

கோயில் நில மோசடி வழக்கில் முக்கிய மூளையாக செயல்பட்டதாக கூறப்படும் வழக்கறிஞர் அன்வர்தீன் திடீரென மதுரை சிறையில் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இவரது உயிரிழப்புக்கு வேறு காரணம் இருக்குமா என்ற சந்தேகமும் போலீஸாருக்கு எழுந்துள்ளது.

அன்வருதீன் உயிரிழந்தது குறித்து அவரது குடும்பத்தினருக்கு நேற்று இரவே சிறைத்துறை நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது. இன்று காலை அவரது குடும்பத்தினர் மதுரை அரசு மருத்துவமனைக்கு வந்துள்ளனர்.






# கடன் வாங்கியவர்களை மிரட்டக் கூடாது: புதிய விதிகளை வெளியிட்டது ரிசர்வ் வங்கி




புதுடெல்லி:கடன் வாங்கியவர்களை மிரட்டுதல், திட்டுதல், சமூக வலைதளங்களில் தொல்லை தருதல் போன்ற செயல்களில் வங்கி ஏஜெண்டுகள் ஈடுபடக் கூடாது என்று இந்திய ரிசர்வ் வங்கி புதிய விதிகளை வெளியிட்டுள்ளது.

இது கடன் வாங்கியவர்களுக்கு பெரிய அளவில் நிம்மதியை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று தவணையை செலுத்தத் தவறும் வாடிக்கையாளர்களை, வசூல் முகவர்கள் அச்சுறுத்துவதைத் தடுக்கும் நோக்கில் இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) இந்த புதிய அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடன் நிலுவையை வசூலிப்பது வங்கியின் உரிமையாக இருந்தாலும், அது வாடிக்கையாளரின் தனிப்பட்ட சுதந்திரம், கண்ணியம் மற்றும் தனியுரிமையைப் பாதிக்கும் வகையில் அமையக் கூடாது என ரிசர்வ் வங்கி தெளிவாகக்குறிப்பிட்டுள்ளது.

வங்கிகள் மற்றும் வசூல் முகவர்களுக்கான இந்த ஒருங்கிணைந்த புதிய வழிகாட்டுதல் விதிமுறைகள் 2027 ஜனவரி 1-ம் தேதி முதல் நாடு முழுவதும் அதிகாரப் பூர்வமாக அமலுக்கு வரவுள்ளன.

கடன் வாங்கியவர்களை, வசூல் செய்யும் வங்கி ஏஜெண்டுகள், மிரட்டுதல், திட்டுதல், சமூக வலைதளங்களில் தொல்லை தருதல் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. புதிய விதிகளின்படி, வங்கி வசூல் முகவர்கள் காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை மட்டுமே வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொள்ளவோ அல்லது நேரில் சென்று சந்திக்கவோ முடியும்.

மேலும்,தெரியாத அல்லது புதிய செல்போன் எண்களில் இருந்து அழைப்பது, அச்சுறுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்துவது, வாடிக்கையாளர்களை திட்டுவது, மிரட்டுவது, சமூக வலைதளங்களில் வாடிக்கையாளரின் விவரங்களைப்பதிவிட்டு தொல்லை தருவது மற்றும் உறவினர்கள், நண்பர்களைத் தொடர்பு கொண்டு தொந்தரவு செய்வது முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

வசூல்முகவர்கள் தங்களது அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும் என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

# தொடர்ந்து அதிகரிக்கும் தங்கம் விலை: பவுனுக்கு ரூ.520 உயர்வு



சென்னை: சந்தையில் தங்கம்விலைதொடர்ந்து அதிகரித்து வருகிறது. அந்த வகையில் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை சென்னையில் (ஆக.8) பவுனுக்கு ரூ.520 என்று உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு,தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையிலானமோதலின் தாக்கம் உலகபொருளாதாரத்தில் எதிரொலித்து வருகிறது. அது சர்வதேச அளவில் தங்க விற்பனையில்தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த மே மாதம் தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. அதையடுத்து தங்கம்விலையில்தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. நேற்று (வெள்ளிக்கிழமை) தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,200 என அதிகரித்து விற்பனை யானது.

இந்தச் சூழலில் சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.65 உயர்ந்து,ஒருகிராம் ரூ.13,965-க்கு விற்பனை யா ஃஸ்கிறது. பவுனுக்கு ரூ.520 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,11,720-க்கு விற்பனையாகிறது.

24காரட் ஆபரணத்தங்கம் கிராமுக்கு ரூ.71 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.15,234-க்கு விற்பனையாகிறது. வெள்ளி விலையை பொறுத்தவரையில் இன்று சந்தையில் மாற்றமின்றி விற்பனைஆகிறது.ஒருகிராம் வெள்ளி ரூ.250-க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.2,50,000-க்கும் விற்பனையாகிறது.

# கரும்பு ஏற்றி சென்ற லாரியை மடக்கிய ஒற்றை யானை



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட வனப்பகுதிகளில் யானைகள் அதிக அளவில் வசித்து வருகின்றன. இந்த வனப்பகுதி வழியாக தமிழகம்- கர்நாடக மாநிலங்களை இணைக்கும் சத்தியமங்கலம்-மைசூர்தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது. பகல் நேரங்களில் வனப்பகுதியை விட்டு வெளியேறும் காட்டு யானைகள் தேசிய நெடுஞ்சாலையில் நடமாடுவது வழக்கம்.

சமீபகாலமாக உணவு தண்ணீர் தேடி அடர்ந்த வனப்பகுதியை விட்டு வெளியேறும் யானைகள் கிராமத்துக்குள் புகுந்து விளை நிலங்களை தொடர்ந்து சேதப்படுத்தி வருகிறது.

இதேபோல் சக்தி மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் உலாவரும் ஒற்றை யானை கரும்பு லோடுஏற்றிவரும்லாரிகள் மற்றும் காய்கறிகளோடு ஏற்றி வரும் லாரிகளை வாசனை பிடித்து வழிமறித்து கரும்பு காய்கறிகளை பறித்து சாப்பிடும் சம்பவம் அதிகரித்து வருகிறது.


இந்நிலையில் தாளவாடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் கடந்தசிலநாட்களாகவே ஒற்றை யானை ஒன்று வனப்பகுதி விட்டு வெளியேறி உலா வந்து கொண்டிருக்கிறது. கரும்பு லோடுகளை ஏற்றி செல்லும் லாரிகளைவழிமறித்து கரும்புகளை தின்று வருகின்றன. யானை வந்ததால் அதிர்ச்சி அடைந்த ஓட்டுனர் லாரியை நிறுத்தினார். பின்னர் அந்த ஒற்றை யானை தும்பிக்கையால் லாரியின் மேற்பகுதியில் இருந்த கரும்பு கட்டிகளை எடுத்து கீழே போட்டு சாவகாசமாக சாப்பிட்டுவிட்டு அந்த பகுதியில் இருந்து சென்றது இதன் பிறகு அந்தப் பகுதியில் மீண்டும் போக்குவரத்து சீரானது. வனத்துறையினர் தாளவாடி பகுதியில் சுற்றி வரும்ஒற்றையானையை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட வாகன ஓட்டிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

போக்குவரத்து பாதிப்பு

இந்நிலையில் நேற்று திம்பம் மலைப்பகுதியில் கரும்பு லோடுகளை ஏற்றி வந்த லாரியை அந்த ஒற்றை யானை மடக்கியது இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# தமிழகத்தில் 60% வரை உயரும் நில வழிகாட்டி மதிப்பு: அரசு அதிரடி நடவடிக்கை!





தமிழகத்தில் மனைப் பிரிவுகள், விவசாய நிலங்கள், வணிகக் கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளின் சந்தை மதிப்பு நாளுக்கு நாள் கணிசமாக உயர்ந்து வருகிறது. இருப்பினும்,பலபகுதிகளில் அரசு பதிவுத்துறையின் நில வழிகாட்டி மதிப்பு தற்போதைய சந்தை விலையை விட மிகவும் குறைவாகவே உள்ளது.

இந்த இடைவெளியைச் சரிசெய்யும் வகையில்,தமிழக அரசு சார்பதிவாளர் அலுவலகங்கள் வாயிலாக மாநிலம் முழுவதிலும் உள்ள நிலங்களின் வழிகாட்டி மதிப்பை 30 சதவீதம் முதல் 60 சதவீதம் வரை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வருவாய்க் கிராமங்கள், நகரப் பகுதிகள் மற்றும் முக்கியச் சாலைப் பகுதிகளில் சமீபத்தில் நடைபெற்ற சொத்துப் பதிவுகள் மற்றும் சந்தை நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டப் பதிவாளர் தலைமையில், மண்டல வாரியாகக் கிராமங்களின் நில விவரங்களைச் சரிபார்க்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

# கரூர் கூட்டநெரிசல்: இறந்தோரின் குடும்பத்தினருக்கு அரசுப்பணி வழக்கு; வரும் 14ம்தேதி சுப்ரீம்கோர்ட்டில் விசாரணை



கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி பலியானவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப்பணி வழங்கியதை ரத்து செய்ததற்கு எதிரான வழக்கை வரும் 14-ம் தேதி சுப்ரீம்கோர்ட்டு விசாரிக்கிறது.

தமிழக வெற்றிக்கழகம் சார்பில் கரூரில் கடந்த செப்டம்பர் மாதம் முதல்-அமைச்சர் விஜய் பங்கேற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுகுறித்து சி.பி.ஐ.விசாரணைநடத்தும்படி சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது.

இது தொடர்பாக முதல்-அமைச்சர் விஜய் உள்பட பலரிடம் சி.பி.ஐ. விசாரணை நடத்தி உள்ளது. இந்தநிலையில் கரூர் சம்பவத்தில் பலியானவர்களின் 31 பேர் குடும்பத்திற்கு கருணை அடிப்படையில் அரசு வேலைக்கான நியமன ஆணைகளை கடந்த ஜூலை 10-ந்தேதி கரூரில் நடந்த விழாவில் முதல்-அமைச்சர் விஜய் வழங்கினார்.

ரத்துசெய்தஐகோர்ட்டு

இதனை எதிர்த்து நாம் தமிழர்கட்சியின் மீனவர் பாசறை நிர்வாகி தீரன் திருமுருகன் உள்ளிட்டோர் மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்குகளை கடந்த 27-ந்தேதி விசாரித்த நீதிபதி, கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு வேலை வழங்கிய அரசாணையை ரத்து செய்து பரபரப்பு தீர்ப்பு கூறினார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு சார்பில் சுப்ரீம்கோர்ட்டில்மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த மனுவில், 'தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவில் கோர்ட்டுதலையிடமுடியாது.இந்தவிவகாரத்தில் தொடர்புடைய 31 பேரின் தரப்பு வாதத்தை ஐகோர்ட்டு கேட்கவில்லை. எனவே, மேல்முறையீட்டு மனுவை விசாரித்து முடித்து தீர்ப்பை ரத்து செய்யும் வரை ஐகோர்ட்டு தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்' என்று அதில் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி பலியானவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 31 பேருக்கு வழங்கிய அரசு வேலையை ரத்து செய்த ஐகோர்ட்டு தீர்ப்புக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில்தாக்கல்செய்யப்பட்டிருந்த மேல்முறையீடு மனு மீது, வரும் 14-ம் தேதி விசாரணை நடைபெறுகிறது.

பாதிக்கப்பட்ட ஆனந்த ஜோதி மற்றும் பிரபாகரன் செல்வகுமார் ஆகியோரின் மனுக்கள் மீது விசாரணை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அன்றைய தினமே தமிழ்நாடு அரசு தொடர்ந்த மேல்முறையீடு வழக்கும் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தை திமுக புறக்கணிப்பது முறையற்றது அமைச்சர் ராஜ்மோகன் பேட்டி



தொகுதி மறுவரையறை தொடர்பான அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தை திமுக புறக்கணிப்பது முற்றிலும்முறையற்றது என்று அமைச்சர் ராஜ்மோகன் குற்றம் சாட்டியுள்ளார்.தமிழக முதல்-அமைச்சர் விஜய் தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கில் தொகுதி மறுவரையறை குறித்த முக்கிய அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது. இந்த ஆலோசனைக்கூட்டத்தைபுறக்கணிப்பதாக திமுக மற்றும் அதிமுக ஆகிய கட்சிகள் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன.

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களைச்சந்தித்தஅமைச்சர் ராஜ்மோகன், அப்போது அவர் கூறியதாவது:-

மாநில நலனில் அக்கறை இல்லை

தொகுதி மறுவரையறை என்பது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உரிமை மற்றும் மாநில நலன் சார்ந்த மிக முக்கிய பிரச்சனையாகும். இத்தகைய முக்கியமான கூட்டத்தில் பங்கேற்காமல் திமுகவும், அதிமுகவும் புறக்கணிப்பது முறையல்ல. இதன் மூலம் அவர்களுக்கு மாநில நலனில் சிறிதும் அக்கறை இல்லை என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

நாங்கள் ஆரம்பம் முதலே தொகுதி மறுவரையறை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம்.இந்த விஷயத்தில் எங்களுக்குள்எப்போதுமே இரட்டை நிலைப்பாடு கிடையாது. ஆனால், ஆரம்பத்தில் இந்த வரைவு நகல்களை எரித்து நாடகமாடிய திமுகவினர், இப்போது கூட்டத்தில் கலந்து கொண்டு பேச தைரியமில்லாமல் பதுங்குவது ஏன்?

தமிழகத்தின் வாழ்வாதார பிரச்சனையான காவிரி விவகாரத்தை கையில் எடுத்து திமுகவினர் சுயநல அரசியல் செய்ய பார்க்கிறார்கள். அரசின் இந்த ஆக்கப்பூர்வமான கூட்டத்தை கொச்சைப்படுத்தவும், மக்களின் கவனத்தை திசைதிருப்பவுமே கனிமொழி எம்.பி முயல்கிறார். காவிரி விவகாரத்தை யாராலும் திசை திருப்ப முடியாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

# After meeting PM Modi, Sukhbir Singh Badal's SAD backs women's quota, delimitation Bills



A day after meeting Prime Minister Narendra Modi, Shiromani Akali Dal (SAD) president Sukhbir Singh Badal announced the party's support for the Women's Reservation Bill and the Delimitation Bill.

The Shiromani Akali Dal, at a meeting of its senior leaders in Chandigarh on Saturday, demanded the immediate implementation of the Women's Reservation Bill, SAD president Sukhbir Singh Badal said in a post on X. "The Shiromani Akali Dal draws inspiration from the teachings of the Sikh Gurus, who championed the dignity, equality and equal rights of women.

The Shiromani Gurdwara Parbandhak Committee (@SGPCAmritsar) has already set an example by providing for women's reservation in its House," he said.

The party also extended its support to the Delimitation Bill. According to Badal, after detailed deliberations on key issues before Parliament, the Shiromani Akali Dal demanded a fair and equitable delimitation process that ensures equal representation to all states. The Shiromani Akali Dal supported the proposal put forward by the Government of India on the floor of the House for a uniform 50% increase in the number of seats for all states. The party emphasised that both women's reservation and delimitation should be implemented immediately.

Party senior leader Naresh Gujral said the decision was "a very logical thing" for the party to do. "We have one member in the Parliament and we cannot just oppose the two bills for the sake of it,"

said Gujral, party vice-president and former Rajya Sabha member. "We have been supporting women reservation in the Parliament and delimitation is need of the hour," he further said.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.